# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை
# மே 2022.05.19

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் மே மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.05.19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.42 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை கீழ்க்காணும் அங்கத்தவர்கள் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
2. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
3. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
4. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
5. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
6. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
7. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
8. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
9. கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா
10. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
11. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா
12. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
13. கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ்
14. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
15. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
16. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
17. கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா
18. கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா
19. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
20. கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன்
21. கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன்
22. கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி
23. கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ்
24. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
25. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்
26. கௌரவ உறுப்பினர் சுபாஸ்கரன் சந்திரமதி
27. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
28. கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன்
29. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 49 வது கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், சபையின் பதில் செயலாளர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

- ❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களான சண்முகலிங்கம் சஜீவன், ஐயாத்துரை மயூரன் ஆகியோர் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறியத் தந்துள்ளார்கள் எனக் கூறி அவர்களது விடுமுறையினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர்களான சண்முகலிங்கம் சஜீவன், ஐயாத்துரை மயூரன் ஆகியோர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் காலை 09.45 மணிக்கு வருகை தந்தார்.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எமது இளைஞர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அவர்களை வழிப்படுத்த வேண்டியது அவசியம். மே 09 ஆம் திகதி காலி முகத்திடலில் ஜனநாயக ரீதியில் போராடிய மக்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளமையானது கண்டனத்திற்குரியதாகும். கடந்த மாதம் 29 ஆம் திகதி பதவி விலகிய எமது சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி.பிறேமலதா பாஸ்கரன் அவர்கள் இறைபதமடைந்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

  ❖ கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ் அவர்கள் காலை 09.49 மணிக்கு வருகை தந்தார்.

  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 21.04.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

- ஏப்ரல் மாதம் 21.04.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

➢ அடுத்து 09.05.2022 ஆம் திகதி நடைபெற்ற நிதிக்குழுக் கூட்ட சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | World Construction Vaddukoddai. | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thenarvely Neeraviyady veethy (Palaly North) வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 749,675.00 |
| 02 | Shagana Construction | சபைநிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Myliddy sub office Stage II இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு. | Rs 3,487,785.81 |
| 03 | இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் | ஆயுர் வேத மருந்துகள் கொள்ளவனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 214,035.00 |
| 04 | Metropolitan Technologies (Pvt) Ltd | Toner கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 445,014.00 |

❖ கௌரவ உறுப்பினர்களான சிவபாலசுந்தரம் ஹரிகரன், கெங்காசுசுதன் பிரதீபன் ஆகியோர்கள் காலை 09.55 மணிக்கு வருகை தந்தனர்.

**தீர்மான இல: 01/19.05.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | World Construction Vaddukoddai. | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thenarvely Neeraviyady veethy (Palaly North) வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 749,675.00 |
| 02 | Shagana Construction | சபைநிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Myliddy sub office Stage II இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு. | Rs 3,487,785.81 |
| 03 | இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் | ஆயுர் வேத மருந்துகள் கொள்ளவனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 214,035.00 |
| 04 | Metropolitan Technologies (Pvt) Ltd | Toner கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 445,014.00 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ பிரதித்திட்டப்பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம், வட மாகாணம் அவர்களின் LDSP/NP/PIU/LAS BANK/2022 ஆம் இலக்க 18.05.2022 ஆந் திகதிய கடிதத்திற்கமைவாக பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்திற்காக தனியான வங்கிக்கணக்கினை பேணுமாறு கூறப்பட்டதற்கமைவாக மேற்படி திட்டத்திற்கான நடைமுறைக்கணக்கினை இலங்கை வங்கி,

காங்கேசன்துறை கிளையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை- உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP PROJECT) என்ற பெயரில் ஆரம்பித்து காசோலையில் முதலாவது கையொப்பதாரராக திரு.சு.சுதர்ஜன் செயலாளர்- வலிகாமம் வடக்கு பிரதேச சபை அவர்களும், இரண்டாவது கையொப்பதாரராக திரு.தி.தியாகச்சந்திரன் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்- வலிகாமம் வடக்கு பிரதேச சபை அவர்களும் கையொப்பமிடுவதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 02/19.05.2022**

பிரதித்திட்டப்பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம், வட மாகாணம் அவர்களின் LDSP/NP/PIU/LAS BANK/2022 ஆம் இலக்க 18.05.2022 ஆந் திகதிய கடிதத்திற்கமைவாக பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்திற்காக தனியான வங்கிக்கணக்கினை பேணுமாறு கூறப்பட்டதற்கமைவாக மேற்படி திட்டத்திற்கான நடைமுறைக்கணக்கினை இலங்கை வங்கி, காங்கேசன்துறை கிளையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை- உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP PROJECT) என்ற பெயரில் ஆரம்பித்து காசோலையில் முதலாவது கையொப்பதாரராக திரு.சு.சுதர்ஜன் செயலாளர்- வலிகாமம் வடக்கு பிரதேச சபை அவர்களும், இரண்டாவது கையொப்பதாரராக திரு.தி.தியாகச்சந்திரன் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்- வலிகாமம் வடக்கு பிரதேச சபை அவர்களும் கையொப்பமிடுவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கேதுவாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவில் பின்வரும் உத்தியோகத்தர்களை நியமிக்க சபையின் தழுவு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
    - எந்திரி செ.நிரோசன் - நிறைவேற்றுப் பொறியியலாளர்-RDD, யாழ்ப்பாணம்- தலைவர்
    - திரு.பொ.ஜனகன் - வேலைகள் அத்தியட்சகர்- பி.உ.உ.ஆ அலுவலகம், - உறுப்பினர்
    - செல்வி.தெ.பிரணவி - மு.சே.உ – வலிகாமம் வடக்கு பி.ச – உறுப்பினர்

**தீர்மான இல :- 03/19.05.2022**

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கேதுவாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவில் பின்வரும் உத்தியோகத்தர்களை நியமிக்க தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எந்திரி செ.நிரோசன் - நிறைவேற்றுப் பொறியியலாளர்-RDD, யாழ்ப்பாணம்- தலைவர்
- திரு.பொ.ஜனகன் - வேலைகள் அத்தியட்சகர்- பி.உ.உ.ஆ அலுவலகம், - உறுப்பினர்
- செல்வி.தெ.பிரணவி - மு.சே.உ – வலிகாமம் வடக்கு பி.ச – உறுப்பினர்

➢ சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்பமதிப்பீட்டுக்குழுவின் சிபாரிசுக்கு அமையவும் பெறுகைக்குழுவின் தீர்மானத்திற்கு அமையவும் பின்வரும் விபரப்படி ஒப்பந்தம் மேற்கொண்டு வேலையினை நடைமுறைப்படுத்துவதற்காக சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| No | Project | Contractor | Contract Amount | GS Division |
|---|---|---|---|---|
| 01 | Renovation of Mill Lane 1st left Site Lane - Mallakam | Yaso Engineers & Contractors | 575,823.00 | J/213 |
| 02 | Renovation of Ponnippulam Road 3 rd Left Site Lane -Alaveddy North | Excess Civil Engineering Construction | 1,238,499.00 | J/215 |
| 03 | Renovation of Alukkai Road 5 th Right Site Lane – Alaveddy East | Excess Civil Engineering Construction | 1,067,563.00 | J/217 |
| 04 | Reconstruction of Chankanai Vallai Road 9 th Left Site Lane ( Nariyiddan) -Mallakam South | Yaso Engineers & Contractors | 430,754.00 | J/212 |
| 05 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Shagana Construction | 2,515,261.00 | J/219 |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | Reconstruction Airport Front Road – Myliddy North | Yaso Engineers & Contractors | 1,213,742.40 | J/246 |
| 07 | Construction of Palaly North Colony Road | Shagana Construction | 2,214,682.50 | J/254 |
| 08 | Reconstruction of Maanaviral Road -Palaly | Icon Construction | 1,139,427.00 | J/253 |
| 09 | Reconstruction of Thampuliyaakadavai Road at Kurumpasiddy | Yaso Engineers & Contractors | 1,231,916.00 | J/242 |
| 10 | Reconstruction of Saampuvil Vairavar Kovil Road -Thaiyiddy South | Icon Construction | 1,575,874.00 | J/250 |

**தீர்மான இல :- 04/19.05.2022**

சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்பமதிப்பீட்டுக்குழுவின் சிபாரிசுக்கு அமையவும் பெறுகைக்குழுவின் தீர்மானத்திற்கு அமையவும் பின்வரும் விபரப்படி ஒப்பந்தம் மேற்கொண்டு வேலையினை நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| No | Project | Contractor | Contract Amount | GS Division |
|---|---|---|---|---|
| 01 | Renovation of Mill Lane 1st left Site Lane - Mallakam | Yaso Engineers & Contractors | 575,823.00 | J/213 |
| 02 | Renovation of Ponnippulam Road 3 rd Left Site Lane -Alaveddy North | Excess Civil Engineering Construction | 1,238,499.00 | J/215 |
| 03 | Renovation of Alukkai Road 5 th Right Site Lane – Alaveddy East | Excess Civil Engineering Construction | 1,067,563.00 | J/217 |
| 04 | Reconstruction of Chankanai Vallai Road 9 th Left Site Lane ( Nariyiddan) -Mallakam South | Yaso Engineers & Contractors | 430,754.00 | J/212 |
| 05 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Shagana Construction | 2,515,261.00 | J/219 |
| 06 | Reconstruction Airport Front Road – Myliddy North | Yaso Engineers & Contractors | 1,213,742.40 | J/246 |
| 07 | Construction of Palaly North Colony Road | Shagana Construction | 2,214,682.50 | J/254 |
| 08 | Reconstruction of Maanaviral Road -Palaly | Icon Construction | 1,139,427.00 | J/253 |
| 09 | Reconstruction of Thampuliyaakadavai Road at Kurumpasiddy | Yaso Engineers & Contractors | 1,231,916.00 | J/242 |
| 10 | Reconstruction of Saampuvil Vairavar Kovil Road -Thaiyiddy South | Icon Construction | 1,575,874.00 | J/250 |

- ❖ கௌரவ உறுப்பினர்களான சிவகுமாரன் செந்தூரன், பொன்னம்பலம் ஆதவன் ஆகியோர்கள் காலை 10.12 மணிக்கு வருகை தந்தனர்.

- ➢ அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்பமதிப்பீட்டுக்குழுவின் சிபாரிசுக்கு அமையவும் பெறுகைக்குழுவின் தீர்மானத்திற்கு அமையவும் பின்வரும் விபரப்படி ஒப்பந்தம் மேற்கொண்டு வேலையினை நடைமுறைப்படுத்துவதற்காக சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| No | Project | Contractor | Contract Amount | GS Division |
|---|---|---|---|---|
| 01 | Reconstruction of Soda Company Road & Soda Company Road 3 rd Right Lane | Vigadar Civil Contractor | 1,068,608.00 | J/214 |
| 02 | Reconstruction of Sodacompany 2nd Right Lane , 1st Right Lane -Mallakam | Yaso Engineers & Contractors | 1,009,766.00 | J/229 |
| 03 | Reconstruction of Saloon Road & Saloon Road 1st Right Site Lane | Yaso Engineers & Contractors | 1,803,599.00 | J/232 |
| 04 | Reconstruction of 8 th Mile Post Lane 2nd Right Site Lane , 1 st Left Site ByLane | Icon Construction | 937,880.00 | J/229 |
| 05 | Reconstruction of Vigneswara Road – 2 nd Left Site Lane -Thaiyiddy South | Icon Construction | 859,790.00 | J/250 |
| 06 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) -Kurumpasiddy | Vigadar Civil Contractor | 2,105,000.00 | J/238 |
| 07 | Reconstruction of Kuruman Anikkai Road - Kadduvan | Yaso Engineers & Contractors | 527,895.00 | J/239 |

**தீர்மான இல :- 05/19.05.2022**

அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்பமதிப்பீட்டுக்குழுவின் சிபாரிசுக்கு அமையவும் பெறுகைக்குழுவின் தீர்மானத்திற்கு அமையவும் பின்வரும் விபரப்படி ஒப்பந்தம் மேற்கொண்டு வேலையினை நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| No | Project | Contractor | Contract Amount | GS Division |
|---|---|---|---|---|
| 01 | Reconstruction of Soda Company Road & Soda Company Road 3 rd Right Lane | Vigadar Civil Contractor | 1,068,608.00 | J/214 |
| 02 | Reconstruction of Sodacompany 2nd Right Lane , 1st Right Lane -Mallakam | Yaso Engineers & Contractors | 1,009,766.00 | J/229 |
| 03 | Reconstruction of Saloon Road & Saloon Road 1st Right Site Lane | Yaso Engineers & Contractors | 1,803,599.00 | J/232 |
| 04 | Reconstruction of 8 th Mile Post Lane 2nd Right Site Lane , 1 st Left Site ByLane | Icon Construction | 937,880.00 | J/229 |
| 05 | Reconstruction of Vigneswara Road – 2 nd Left Site Lane -Thaiyiddy South | Icon Construction | 859,790.00 | J/250 |
| 06 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) -Kurumpasiddy | Vigadar Civil Contractor | 2,105,000.00 | J/238 |
| 07 | Reconstruction of Kuruman Anikkai Road - Kadduvan | Yaso Engineers & Contractors | 527,895.00 | J/239 |

- மேற்படி சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகள் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் ஒப்பந்தகாரர்களால், தற்போதைய சந்தை நடப்பு நிலவரங்களின்படி மூலப்பொருட்களின் விலையேற்றம் மற்றும் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Se.No | Project | Contractor |
|---|---|---|
| 01 | Renovation of Ponnippulam Road 3 rd Left Site Lane -Alaveddy North | Excess Civil Engineering Construction |
| 02 | Renovation of Alukkai Road 5 th Right Site Lane – Alaveddy East | Excess Civil Engineering Construction |
| 03 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Shagana Construction |
| 04 | Construction of Palaly North Colony Road | Shagana Construction |
| 05 | Reconstruction of Maanaviral Road -Palaly | Icon Construction |
| 06 | Reconstruction of Saampuvil Vairavar Kovil Road -Thaiyiddy South | Icon Construction |

**தீர்மான இல :- 06/19.05.2022**

மேற்படி சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகள் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் ஒப்பந்தகாரர்களால், தற்போதைய சந்தை நடப்பு நிலவரங்களின்படி மூலப்பொருட்களின் விலையேற்றம் மற்றும் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Se.No | Project | Contractor |
|---|---|---|
| 01 | Renovation of Ponnippulam Road 3 rd Left Site Lane -Alaveddy North | Excess Civil Engineering Construction |
| 02 | Renovation of Alukkai Road 5 th Right Site Lane – Alaveddy East | Excess Civil Engineering Construction |
| 03 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Shagana Construction |
| 04 | Construction of Palaly North Colony Road | Shagana Construction |
| 05 | Reconstruction of Maanaviral Road -Palaly | Icon Construction |
| 06 | Reconstruction of Saampuvil Vairavar Kovil Road -Thaiyiddy South | Icon Construction |

- மேற்படி அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகள் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் ஒப்பந்தகாரர்களால், தற்போதைய சந்தை நடப்பு நிலவரங்களின்படி மூலப்பொருட்களின் விலையேற்றம் மற்றும் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில்

கொண்டு தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Se.No | Project | Contractor |
|---|---|---|
| 01 | Reconstruction of Soda Company Road & Soda Company Road 3 rd Right Lane | Vigadar Civil Contractor |
| 02 | Reconstruction of 8 th Mile Post Lane 2nd Right Site Lane , 1 st Left Site ByLane | Icon Construction |
| 03 | Reconstruction of Vigneswara Road – 2 nd Left Site Lane -Thaiyiddy South | Icon Construction |
| 04 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) - Kurumpasiddy | Vigadar Civil Contractor |

**தீர்மான இல :- 07/19.05.2022**

மேற்படி அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகள் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் ஒப்பந்தகாரர்களால், தற்போதைய சந்தை நடப்பு நிலவரங்களின்படி மூலப்பொருட்களின் விலையேற்றம் மற்றும் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Se.No | Project | Contractor |
|---|---|---|
| 01 | Reconstruction of Soda Company Road & Soda Company Road 3 rd Right Lane | Vigadar Civil Contractor |
| 02 | Reconstruction of 8 th Mile Post Lane 2nd Right Site Lane , 1 st Left Site ByLane | Icon Construction |
| 03 | Reconstruction of Vigneswara Road – 2 nd Left Site Lane -Thaiyiddy South | Icon Construction |
| 04 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) - Kurumpasiddy | Vigadar Civil Contractor |

➢ இதன்படி சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைகள் இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கான சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Yaso Construction | 2,763,497.00 |
| 02 | Construction of Palaly North Colony Road | Mahan Enterprises Construction & Engineering | 2,219,035.00 |

**தீர்மான இல :- 08/19.05.2022**

இதன்படி சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைகள் இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Yaso Construction | 2,763,497.00 |
| 02 | Construction of Palaly North Colony Road | Mahan Enterprises Construction & Engineering | 2,219,035.00 |

➢ இதன்படி அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) -Kurumpasiddy | Mahan Enterprises Construction & Engineering | 2,171,008.00 |

**தீர்மான இல :- 09/19.05.2022**

இதன்படி அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய

கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) -Kurumpasiddy | Mahan Enterprises Construction & Engineering | 2,171,008.00 |

- இரண்டாவது முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்ட வேலைகளில் கீழ் குறிப்பிடப்படும் ஒப்பந்தகாரர் சீமெந்து விலையேற்றம் மற்றும் மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமம் காரணமாக தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Yaso Construction | 2,763,497.00 |

**தீர்மான இல :- 10/19.05.2022**
இரண்டாவது முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்ட வேலைகளில் கீழ் குறிப்பிடப்படும் ஒப்பந்தகாரர் சீமெந்து விலையேற்றம் மற்றும் மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமம் காரணமாக தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Renovation of Appachchippillai Road 3 rd 4th 5th Right Lane – Alaveddy North | Yaso Construction | 2,763,497.00 |

- எமது சபையின் எல்லைக்குட்பட்ட கட்டுவன், தென்மயிலை, வறுத்தலைவிளான் கிராமங்களைச் சேர்ந்த மக்களால் உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற ஞானோதயா பொதுநூலக நற்பணியகம் என்ற பெயரிலுள்ள அமைப்பினை பதிவு செய்வதற்கான கோரிக்கையினைச் சமர்ப்பித்துள்ளனர். இவ்வமைப்பினை பதிவுசெய்வதன் பொருட்டு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 11/19.05.2022**
எமது சபையின் எல்லைக்குட்பட்ட கட்டுவன், தென்மயிலை, வறுத்தலைவிளான் கிராமங்களைச் சேர்ந்த மக்களால் உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற ஞானோதயா பொதுநூலக நற்பணியகம் என்ற பெயரிலுள்ள அமைப்பினை பதிவு செய்வதற்கான கோரிக்கையினைச் சமர்ப்பித்துள்ளனர். இவ்வமைப்பினை பதிவுசெய்வதன் பொருட்டு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் சுற்றுச்சூழல் வாரத்தினை யூன் 01 ஆந் திகதி முதல் யூன் 07 ஆந் திகதி வரை அனுஸ்டிப்பதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 12/19.05.2022**
வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் சுற்றுச்சூழல் வாரத்தினை யூன் 01 ஆந் திகதி முதல் யூன் 07 ஆந் திகதி வரை அனுஸ்டிப்பதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- 05.11.2021 ஆந் திகதிய கேள்விச்சபை தீர்மானத்திற்கு அமைய கும்பலைச் சந்தை இராசையா பிரகலாதன் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவர் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் தவணைப்பணம் செலுத்தாத காரணத்தினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு மீளவும் ஏலம் கோருவதற்கும் அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடையினை இதுவரை எவரும் கேள்வி கோராமையால் பின்வரும் விபரப்படி ஏலம் மூலம் வழங்குவதற்கும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 | கும்பலைச்சந்தை | | 228,000.000 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 8,100.00 |

**தீர்மான இல :- 13/19.05.2022**

05.11.2021 ஆந் திகதிய கேள்விச்சபை தீர்மானத்திற்கு அமைய கும்பலைச் சந்தை இராசையா பிரகலாதன் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவர் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் தவணைப்பணம் செலுத்தாத காரணத்தினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு மீளவும் ஏலம் கோருவதற்கும் அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடையினை இதுவரை எவரும் கேள்வி கோராமையால் பின்வரும் விபரப்படி ஏலம் மூலம் வழங்குவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 | கும்பலைச்சந்தை | | 228,000.000 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 8,100.00 |

➢ எமது சபையின் அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சி கடை இல 07 இல் மாட்டிறைச்சிக்கடை நடாத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளனர். இக்கடையினை மாட்டிறைச்சி கடையாக மாற்றி வாடகைக்கு வழங்குவதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 14/19.05.2022**

எமது சபையின் அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சி கடை இல 07 இல் மாட்டிறைச்சிக்கடை நடாத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளனர். இக்கடையினை மாட்டிறைச்சி கடையாக மாற்றி வாடகைக்கு வழங்குவதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ சீராவளை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கழிவுகளை தரம் பிரித்தல் மற்றும் ஏனைய வேலைகளினை மேற்கொள்வதற்காக ஐந்து தொழிலாளர்களை வெளிவாரி அடிப்படையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசிற்கமைய சனசமூக நிலையம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 15/19.05.2022**

சீராவளை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கழிவுகளை தரம் பிரித்தல் மற்றும் ஏனைய வேலைகளினை மேற்கொள்வதற்காக ஐந்து தொழிலாளர்களை வெளிவாரி அடிப்படையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசிற்கமைய சனசமூக நிலையம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ எமது சபையின் பொதுநூலகங்களில் பேணப்பட்டுவரும் தொலைந்துபோன புத்தகங்களின் அறவீடுகளை தீர்மானிப்பதற்காக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் கடந்த காலங்களில் மல்லாகம், மயிலிட்டி, தெல்லிப்பழை ஆகியன கிராம சபையாகவும் காங்கேசன்துறை பட்டின சபையாகவும் இருந்த போதிலிருந்து எமது நான்கு பொதுநூலகங்களிலும் வெவ்வேறு விதமான அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உப தவிசாளர் அவர்கள் சில புத்தகங்கள் கிடைப்பது சிரமமான அரிய புத்தகங்களாக இருக்கின்றது. அவற்றிற்கான அறவீடுகளை தனியான அளவீட்டின் பிரகாரம் மேற்கொள்வது சிறப்பாக அமையும் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 16/19.05.2022**

எமது சபையின் பொதுநூலகங்களில் பேணப்பட்டு வரும் தொலைந்து போன புத்தகங்களிற்காக நடைமுறை சந்தை விலையுடன் 25% தண்டப்பணம் மற்றும் புத்தகத்திற்கான பிணைப்புச் செலவு (Binding Cost) ஆகியவற்றிற்கான கட்டணத்தை அறவிடுவதென கௌரவ உறுப்பினர் எட்மன்

தயாவதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான ஏப்ரல் மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பலாலி தெற்கு, வசாவிளான், ஒட்டகப்புலம், பலாலி வடக்கு ஆகிய பகுதிகளில் உரிமையாளர்களால் அடையாளம் காணப்படாத காணிகளை வேறு நபர்கள் அபகரித்து விற்பனை செய்யும் சம்பவங்கள் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது. எனவே மக்கள் காணிகளை கொள்வனவு செய்யும் போது எமது சபையில் காணி உறுதிகளை உறுதிப்படுத்திய பின் கொள்வனவு செய்யுமாறு பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கௌரவ உறுப்பினர்கள் தங்களது பிரதேங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற்றால் அது தொடர்பாக கொள்வனவு செய்பவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் எனது பிரதேசத்தில் 72 பரப்பு காணி முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு பராமரிக்கப்படாமல் பற்றையாக காணப்படுகின்றது. இதன் சுற்றாடலில் 12 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்காணி பற்றையாக காணப்படுவதால் அயலில் வசிப்பவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்ததுடன் கும்பலை பொதுநோக்கு மண்டத்திற்கு வேலி அமைக்கப்பட வேண்டும் என கடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது எனக் கூறி அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பாகவும் வினாவினார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த காணி சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினுடையது. கும்பலை பொதுநோக்கு மண்டபத்திற்கு பாதுகாப்பு வேலி அமைப்பதனை புதிய செயற்திட்டங்களில் இருந்து நிதி கிடைத்ததும் ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் தெல்லிப்பழையில் வைத்தியசாலை கழிவுகள், எமது கழிவகற்றும் இடத்தின் புகைப்படம் சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் புகைப்படம் பல நாட்களுக்கு முன் எடுக்கப்பட்டது. அது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் தற்போது நாட்டில் புதிய பிரதமர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் எமது பிரதேசத்தில் கடந்த 32 வருடங்களாக மக்கள் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து பெரும் இன்னல்களுக்கு மத்தியில் வசித்து வருகின்றனர். எனவே இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்குமாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கௌரவ பிரதம மந்திரியிடம் கோர வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் நாட்டில் மே மாதம் 09 ஆம் திகதி நடாத்தப்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உடனடியாக வீடுகளை அமைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஒரு வாரத்தில் கௌரவ பிரதம மந்திரி அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதே சமயம் எமது மக்கள் கடந்த 32 வருடங்களாக சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து பல இன்னல்களுடன் தொழில் வாய்ப்பு இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். எமக்கு வீடுகள் வழங்க வேண்டும் என்று இல்லை எமது காணிகளையாவது விடுவிக்க வேண்டும். இது தொடர்பாக கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு சபை சார்பாக கடிதம் அனுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் எமது பிரதேச மீள்குடியேற்றம் தொடர்பாக தெரிவிப்பதற்காக அவர்களுக்கும் கடிதம் அனுப்புவது சிறப்பாக அமையும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பிரதேசத்தில் மீள்குடியேற்ற செய்யப்படாமல் உள்ள பகுதிகள் பொருளாதார ரீதியில் வளமான பிரதேசங்கள் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 17/19.05.2022**
வலிகாமம் வடக்கு ஒரு மீள்குடியேற்றப் பிரதேசமாகும். இங்கு சில பகுதிகள் முழுமையாகவும் சில பகுதிகள் பகுதியளவிலும் மீள்குடியேற அனுமதிக்கப்படாமல் உள்ளது. எமது பிரதேசத்தில் ஏறத்ததாழ 7000 குடும்பங்களை சேர்ந்த மக்கள் கடந்த 32 வருடங்களாக தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாமல் நலன்புரி நிலையங்கள், வேறு இடங்களில் இருந்து அல்லலுறுகின்றார்கள். ஆனால் நாட்டில் மே மாதம் 09 ஆம் திகதி நடாத்தப்பட்ட வன்செயல்களால் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ பிரதம மந்திரி அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆகவே எமது மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- இத் தீர்மானத்தை அதி மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவது எனவும் யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ் மாவட்ட இராணுவக்கட்டளைத்தளபதி ஆகியோருக்கு பிரதிகளை அனுப்ப வேண்டும் எனவும் சபையால் தீர்மானிக்கப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் எமது மாதாந்தக் கூட்ட அறிக்கையில் விவாதங்கள் உரிய ஒழுங்கில் தயாரிக்கப்பட வேண்டும். விவாதங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தீர்மானங்களுக்கு முன் இடம்பெற வேண்டும். இது தொடர்பாக சபையின் செயலாளர் அவர்கள் கூடிய கவனமெடுப்பது சிறப்பாக அமையும். சபையின் நிலையியற்குழுக்களின் கூட்டங்கள் இடம்பெறவில்லை. இக்குழுக்கள் வலுவுடையதாக செயற்பட வேண்டும். எமது நிலையியற் குழுக்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியம் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் நான் ஆரம்பத்தில் தொழில்நுட்ப சேவைகள் குழு, நிதி மற்றும் கொள்கை உருவாக்கக் குழுவில் அங்கத்துவம் வகித்து சிறப்பாக செயற்பட்டுள்ளேன். பின் சுற்றாடலும் வாழ் வசதிகளும் குழுவில் தெரிவு செய்யப்பட்டேன். முதலாவது குழுக் கூட்டத்திலும் பங்குபற்றினேன். அதன் பின் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. இக்குழுக்கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட்டால் நாமும் சிறப்பாக செயற்பட முடியும் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் நிலையியற்குழுக்களின் விபரங்களை சபையின் மாநாட்டு மண்டபத்தில் காட்சிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்
❖ கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வாழ்வாதார உதவி வழங்குவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தங்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய வாழ்வாதாரத்தின் விபரத்தினை வழங்கினால் பிரதேச செயலாளரிடம் உறுதிப்படுத்தி கௌரவ ஆளுநரின் அனுமதியை பெற்று செயற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது காலை 10.39 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: சு.சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

ஒப்பம்: சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை.